நூலகம் ...
யாழ்ப்பாணம்

Registered as a News Paper    பக்கங்கள் 06    விலை ரூபா: 5 00

# ஈழநாதம்

THE EELANAATHAM PeoplesDaily மக்கள் தினசரி

நாதம்: 02    திருவள்ளுவர் ஆண்டு 2023    மாசி 03    (15-02-1992)    சனிக்கிழமை    ஓசை: 362

## திட்டமிட்டபடி இன்று பரீட்சை நடைபெறும்!

அமய எழுதுவினைஞர்களுக்கான போட்டிப் பரீட்சை இன்று திட்டமிட்டபடி யாழ் மாவட்டத்தில் நடைபெறும் என கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. இன்று காலைமுதல் அரசாங்கம் யாழ் குடாநாட்டில் ஊரடங்குஉத்தரவைப் பிறப்பித்துள்ள போதிலும் இங்கு சகல பரீட்சை நிலையங்களிலும் பரீட்சை நடைபெறவுள்ளது. இதற்கான சகல ஏற்பாடுகளும் நேற்று மாலையே பூர்த்தியாகியுள்ளன. மேற்படி பரீட்சை கிளி (6 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பில் உக்கிர மோதல்; 16 படையினர் பலி; பலர் படுகாயம்

## விமானங்கள் அகோர குண்டுவீச்சு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய துணிகரத் தாக்குதலில் 16 இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். பலர் படுகாயம் அடைந்தனர். பெருமளவு ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

சுமார் ஒரு மணித்தியாலம் வரை நீடித்த இந்த மோதலின் போது சிறிலங்கா இராணுவத்திற்குத் துணையாக விமானப்படை விமானங்களும், உலங்குவானூர்திகளும் தாக்குதலை மேற்கொண்டன.

இந்த மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் பன்னிரெண்டு புலிகள் வீரச்சாவு அடைந்தனர்.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது உன்னிச்சை இராணுவ முகாமிலிருந்து பவல் கவச வாகனங்கள் சகிதம் ஆயித்தியமலை இராணுவ முகாமை நோக்கி சிறிலங்கா இராணுவ அணியொன்று சென்றுகொண்டிருந்தது. இந்த அணி மீது ஆஞம் சட்டை என்னும் இடத்தில் வைத்து விடுதலைப் புலிகள் துணிகர அதிரடித் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர். சுமார் ஒரு மணிநேரம்நடந்தஇச் சண்டையில் 16 சிறிலங்கா இராணுவத்தினர் பலியாகினர். பலர் [6 ஆம் பக்கம் பார்க்க]

## பெருமளவு ஆயுதங்கள் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் ஆறாம் கட்டை என்னுமிடத்தில் நடைபெற்ற மோதலில் விடுதலைப்புலிகள் சிறிலங்கா இராணுவத்திடம் இருந்து பல நவீனஆயுதங்களைகைப்பற்றியுள்ளனர் அந்த ஆயுதங்களின் விபரம் வருமாறு:

★ ஆர். பி. ஜி -01
★ ஏ கே.எல் எம் ஜி -02
★ ரி-56ரகதுப்பாக்கிகள் -12
★ ஆர். பி. ஜி எறிகணைகள் -04
★ ஏ.கே.ரக மகசீன் -48
★ ஏ.கே.எல்.எம்.ஜி மகசீன் -02
★ நடுத்தரரவைகள் -1025
★ கைக்குண்டு -01

## 12 புலிகள் வீரச்சாவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் ஆறாம் கட்டைப் பகுதியில் நேற்றுச் சிறிலங்கா இராணுவத்தினருடனானபாரிய மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் பன்னிரு வீரவேங்கைகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

இந்தப்பன்னிரு வீரவேங்கைகளுக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத்தெரிவித்துக் கொள்கின்றனர்.

## ஹமில்டன் வனசிங்கா கிழக்கிற்கு விஜயம்

(மட்டக்களப்பு)

சிறிலங்கா கூட்டுப்படைகள் தலைமையலுவலகத்தின் தளபதி ஹமில்டன் வனசிங்க அண்மையில் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்தார். இந்தப்பதவியை ஏற்றபின் இவர் கிழக்கு மாகாணத்திற்கு சென்றது இதுவே முதல் தடவையாகும். இவருடன் உயர் இராணுவ அதிகாரிகள் சிலரும் சென்றிருந்தனர் என தெரியவருகிறது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். குடாநாட்டில் 3 நாள் ஊரடங்கு

(கொழும்பு)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தீவுப்பகுதிகள், காரைநகர் தவிர்ந்த ஏனைய இடங்களில் இன்று காலை 6 00 மணி முதல் 18 ஆம் திகதி காலை 6.00 மணிவரை ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்படும் என கூட்டுப் படை தலைமையலுவலகம் அறிவித்துள்ளது.

## வீதி ஒழுங்கைப் பேண தீவிர நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வீதி ஒழுங்குகளைப் பலப்படுத்தும் நடவடிக்கையில் காவல்துறையின் நபரப் போக்குவரத்துப்பிரிவு திங்கட்கிழமை முதல் தீவிரமாகச் செயற்படவுள்ளது. என்று தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் அறிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக அவர் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் மேலும், எமது மக்கள் அநியாயமான முறையில் மரணிப்பதையும், காயமடைவதையும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. பல மாத காலமாக வீதி ஒழுங்கு முறை தொடர்பாக பத்திரிகைகள் மூலம் அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன. இத் [6 ஆம் பக்கம் பார்க்க]

## சமூகவிரோதி கொலை; ஆயுதம் ஒன்று மீட்பு

(மண்டூர்)

மண்டூரில் நேற்றுமுன்தினம்பிற்பகல்விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் தேசவிரோதி ஒருவர் கொல்லப்பட்டார். அவரிடமிருந்துஎம்70துப்பாக்கி ஒன்றும் அதற்குரிய மகசின் 2ம் கைப்பற்றப்பட்டன.

## மரக்கடத்தலில் இராணுவச் சிப்பாய்கள்

(கொழும்பு)

கருங்காலி மரங்களைக் கடத்திய இராணுவத்தினர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இது பற்றி மேலும் தெரிய வருவதாவது: சீருடைகளோடு பெறுமதிமிக்க கருங்காலி மற்றும் முதிரை மரக்குற்றிகளை நான்கு லொறிகளில் கடத்தி வந்த மூன்று இராணுவத்தினரும், லொறிச்சாரதிகளும் பொலிசாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக் உட்படுத்தப்பட்டுள்ளனர்.

## வீரச்சாவு

### ரவிராஜ், ராம்ராஜ்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் மணற்பிட்டியில் சிறிலங்கா (6ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான தீர்வொன்றிற்கு நிதி உதவுவோர் வற்புறுத்து

### -பிரட்மன் வீரக்கோன்

(கொழும்பு)

வடக்கு, கிழக்குப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காணப்பட வேண்டுமென இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் கோரியுள்ளன. ஆனால் நிபந்தனை எதுவும் விதிக்கப்படவில்லையென சிறிலங்கா ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற வாராந்தச் செய்தியாளர் மாநாட்டில் பேசிய அவர் மேலும் கூறுகையில் யுத்தத்தை தீர்வுக்கு கொண்டுவர சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படவேண்டும் என உதவி வழங்கும் நாடுகள் வலியுறுத்தியிருப்பதாக தெரிவித்தார்.

## 'ஹெலஉறுமய' குழுவிற்கு கட்சியில் இருந்து கல்தா?

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் தோற்றுவிக்கப்பட்ட சிங்களத் தேச பாரம்பரியம் என்ற ஹெலஉறுமய குழுவைச் சேர்ந்த நாற்பத்திரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களும் கட்சியிலிருந்து வெளியேற்றப்படலாம் என நம்பப்படுகிறது. கட்சித்தலைமைப் பீடத்திற்கு புதிய அச்சுறுத்தலாக தோன்றியுள்ள இக் குழுவினர் கட்சியின் அனு ( 6ஆம் பக்கம் பார்க்க)

## அகதிமுகாம் தமிழர் கைது; ஐ. நா. கடும் கண்டனம்

[மன்னார்]

அகதிமுகாம்களில் இருந்து அப்பாவிமக்கள் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்படுவதை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர் ஆலயம் வன்மையாக கண்டித்திருப்பதுடன் இவ்வாறு கைது செய்யப்படுவதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி சிறிலங்கா அரசிடம் கோரிக்கை விடுத்திருக்கிறது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் ஆலயத்தின் பராமரிப்பில் இயங்கிவரும் மன்னார் மாவ ( 6ஆம் பக்கம் பார்க்க)

# சைக்கிள் திருடர் துரத்திப்பிடிக்கப்பட்டார்

(கொழும்புத்துறை)

கோப்பாய் கிழக்கில் பகல் வேளையில் சைக்கிள் திருடிய ஒருவர் பொதுமக்களால் துரத்திப் பிடிக்கப்பட்டு விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

திரு. எஸ். தங்கராசா என்பவரின் வீட்டின் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த சைக்கிளைத் திருடிக்கொண்டு செல்ல முற்பட்டபோதே இவர் பொதுமக்களால் பிடிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

## கலந்துரையாடல் ஒத்திவைப்பு

தமிழீழ ஆய்வுநிறுவனத்தினரால்நாளைமறுதினம் திங்கட்கிழமையன்று யாழ் பல்கலைக்கழகத்தில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கைத்தொழில் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது இக் கலந்துரையாடலுக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டு உள்ளது

## பரீட்சை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

இன்று காலை ஒன்பதுமணிக்கும், பதினொரு மணிக்கும் ஆரம்பமாக இருந்த பொலோ மீ பரீட்சை பிற்பகல் ஒரு மணிக்கும், இரண்டு முப்பது மணிக்கும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இன்று நடைபெறும் எழுதுவினைஞர் பரீட்சையில் தோற்றவிருக்கும் பரீட்சார்த்திகளின் நலன் கருதி பொலோ மீ பரீட்சை ஒத்திவைக்கப்படுவதாக யாழ்ப்பாண பிராந்திய கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

## தெரிவுக்குழுவிற்கு விடுதலைப் புலிகளும் யோசனை கூறலாமாம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளும்இனப்பிரச்சினை தொடர்பான பாராளு மன்றத் தெரிவுக்குழுவிற்கு ஆலோசனை சமர்ப்பிக்கலாம் என்று அமைச்சரவைப் பேச்சாளரான ரணில் விக்ரமசிங்க கூறியுள்ளார். வாராந்தச் செய்தியாளர் மாநாட்டில் பேசிய அமைச்சரவைப் பேச்சாளரான ரணில்விக்ரமசிங்க மேலும் கூறுகையில், பாராளு மன்றத்தெரிவுக்குழுவுக்கு விடுதலைப் புலிகள் யோசனைகள் வழங்கலாம். தேவைப்பட்டால் சாட்சியமும் அளிக்கலாம் என்று தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் சமஷ்டி ஆட்சி முறையை வரவேற்பதாக தெரிகிறதே எனச் செய்தியாளர் ஒருவர் கேட்டபோது அதற்குப் பதிலளித்த அமைச்சர் ரணில் அதனைப் பாராளு மன்றத் தெரிவுக்குழுவேமுடிவு செய்யவேண்டும் எனவும் பதிலளித்தார்.

## தொழிலாளர்கள் சமுகமளிக்கவும்

(யாழ்ப்பாணம்)

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில்வடபிராந்திய வகுப்பு தொழிலாளர் சங்கப்பணிமனையில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் அனைத்து சங்கத்தினர்களும் மற்றும் கிளைச் சங்க உறுப்பினர்களும் தவறாது சமுகம் அளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

அத்துடன் காங்கேசன்துறை துறைமுகத்தில்வேலை வாய்ப்புக்காகவிண்ணப்பித்தஅனைத்துதொழிலாளர்களும் தங்கள் அடையாள அட்டையுடன் அன்றையதினம் அதே நேரம் சமூகம் அளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## கூட்டுறவுச்சங்க கிளையில் திருட்டு

(கொழும்புத்துறை)

நல்லூர் முடமாவடியிலுள்ள நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளையின் கதவு பாரிய பூட்டுக்கள் உடைக்கப்பட்டு அங்குள்ள பெறுமதி மிக்க பல உணவுப் பொருள்கள் திருடர் கோஷ்டி ஒன்றினால் திருடப்பட்டுள்ளன.

இக்கிளையில் இருந்த லக்ஸ்பிறே மா, அரிசி, சீனி, மா மூடைகள், தீப்பெட்டிகள் உட்பட பல பெறுமதி வாய்ந்த பொருள்கள் களவாடப்பட்டுள்ளன. (24)

## உழைப்பாளருக்கென சங்கம் அமைக்க ஏற்பாடு

[யாழ்ப்பாணம்]

கிராமிய உழைப்பாளர்களை ஒன்று திரட்டுவதை மையமாகக் கொண்டு உழைப்பாளர் சங்கமொன்றை ஆரம்பிப்பதற்கான பொதுக்கூட்டம் ஒன்று அமைக்க ஏற்பாடாகியுள்ளது. இப் பொதுக் கூட்டம் நாளை ஞாயிறு மாலை இரண்டு மணியளவில் உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இப் பொதுக் கூட்டத்தில் ''தேச விடுதலைப் போராட்டத்தில் உழைப்பாளர்களின் பங்கு'' என்ற தலைமையில்திரு மூர்த்திஅவர்கள் உரையாற்றவுள்ளார் அத்துடன் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி உட்பட வடமராட்சி, தென்மராட்சி. வலிகாமம் பகுதிகளின் அரசியல் நிர்வாக பொறுப்பாளர்களும் உரையாற்றவுள்ளனர்.

## வரி விளம்பரம்

### ஆங்கில வகுப்பு

பல்கலைக்கழக மாணவர்கள், தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்கள், சாதாரண தர உயர்தர பரீட்சை எடுத்த மாணவர்கள் சகலருக்கும் தனித்தனி பிரிவுகளாக Grammar, Vocabulary! Spoken English பாட விதானங்கள் ஆரம்பம்15-2-92காலை 9மணி

(1) பரமேஸ்வரா சந்தி -பல்கலைக்கழக அருகாண்மை.

(2) ஞானபண்டித வைத்தியசாலை, குளப்பிட்டி.

(2202)

## 'நல்லதங்காள்' இசை நாடகம்

உரும்பராய் உழைப்பாளர் சங்கத்தின் ஆதரவுடன் சுதேசியக் கலை மன்றத்தின் தயாரிப்பான 'நல்ல தங்காள்' என்னும் (இசை நாடகம்) கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய மண்டபத்தில் இன்று மாலை ஆறு முப்பது மணியளவில் இடம்பெறவுள்ளது,

## நிர்வாகசபை கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வேலணைப்பிரிவு சிறுவர் பாடசாலை ஆசிரியர்களுக்கான நிர்வாக சபைக்கூட்டம் இன்று நண்பகல் ஒரு மணிக்கு பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

சகல நிர்வாகசபை உறுப்பினர்களையும் மேற்படி கூட்டத்திற்கு தவறாது சமுகமளிக்குமாறு வேலணை உதவி அரசாங்க அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ச)

## கேள்வி அறிவித்தல்

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் திருநெல்வேலி பிரதான உணவகம், பாலசிங்கம் விடுதி உணவகம், ஆகியவற்றை நடாத்துவதற்காக இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரினால் 1992-02-28 திகதி நண்பகல் 12 00 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் கனித்தனியாக ஏற்றுக் கொள்ளப்படும்.

மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 500/-ம், மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 50 -ம் ஒவ்வொரு உணவகத்திற்கும் தனித்தனியாக பல்கலைக்கழக நிதிக்கிளையில் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினைச் சமர்ப்பித்துக் கேள்விப் படிவங்களை இப்பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப்படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களைக் காரியாலய நேரங்களில் எம்மிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்

04. 02. 92

(சி/3926)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

### செல்வரட்ணம் சுதர்சன் (சுதன்)



அன்னையின் மடியில் :
1967 - 02 - 25

அரக்கரின் கையில் :
1989 - 02 - 15

### செல்வரட்ணம் சுதர்மிளா (சுதனா), (சுதா)



பிறப்பு :
1975

வீர மரணம் ;
23 - 11 - 1990

ஒரு அம்மாவுக்குப் பிறந்த
உடன் பிறப்புகள்
ஒரே இலட்சியத்துக்காக
ஒரே பாதையில்
பயணம் செய்தன.
இவன் ஒரு அண்ணன்
தர்மத்தின் காவலர்களுக்கு
துணையாக நின்றதால்
ஆக்கிரமிக்க வந்த
அதர்மம் புயலோடு
அள்ளுண்டுவந்த துரோகப் புழுதிகளால்
அன்று - அடித்து வீழ்த்தப்பட்டான்
அண்ணன்களின் பாதையில்
'அண்ணனின்' படையில்
அணிவகுத்தாள் தங்கை
மாங்குளத்தில் - அந்த
வரலாற்றுச் சமரில்
மரணத்தை அணைத்து
வரலாற்றில் பதிந்து போனாள்

மாமூலை,
முள்ளியவளை.

உங்கள் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா,
அண்ணாமார், தங்கை,
அம்மம்மா, அப்பையா
நண்பர்கள்

(சி/3850)

## நினைவு கூருகின்றோம் 1992 - 02 - 15

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் மல்லிகைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தின் முற்றுகையின் போது சுடப்பட்டு வீரச்சாவெய்திய

★ **நவம்** [கதிர்காமத்தம்பி நவரட்ணராஜா - பள்ளிக்குடியிருப்பு, மூதூர்]

இதே ஆண்டு வீரச்சாவெய்திய

★ **செல்வன்** [பத்தக்குட்டி மகேந்திரன் - பெரியவெளி]

சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட ஏறாவூர் ஐயங்கேணியைச் சேர்ந்த தமிழ்ப் பொது மகன், பெரியவிளான் இளவாலையைச் சேர்ந்த பொது மகன்.

1988ஆம் ஆண்டு இருதயபுரம் மேற்கில் இந்தியப் படையினரின் முற்றுகையின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**கப்டன் சபேசன்** [ஜோசப் ரவீந்திரன் - இருதயபுரம் மேற்கு, மட்டக்களப்பு]

1989ஆம் ஆண்டு காரைநகரில் இந்தியப் படையினருடனான மோதலின் போது வீரச்சாவெய்திய

**2ஆம்லெப். சந்திரன்** [நாகலிங்கம் சந்திரகுமார்- இலந்தைச்சோலை, காரைநகர்]

**கர்ணன்** [குமாரசாமி தவயோகராஜா - காரைநகர்]

முல்லைத்தீவு, முள்ளியவளைப்பகுதியில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட இளைஞன்

உடுப்பிட்டி முகாமில் இந்தியப்படையால் சுட்டுக் கொல்லப்பட்ட சகோதரிகளான 2 ஆசிரியைகள்

மாவிட்டபுரத்தில் இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு, முகாமில் வைத்து மின்சாரம் பாய்ச்சி சித்திரவதை செய்து கொல்லப்பட்டு பின்னர் சூறாவத்தைப் பகுதியிலிருந்து அம்மியுடன் கட்டப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்ட இளைஞன்

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

★ மேற்குறிப்பிட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(சி-3924)

# காஷ்மீரியரின் உணர்வுகளை இனிகட்டுப்படுத்தமுடியாது

## இந்தியா இதைப் புரிய வேண்டும் — நவாப் ஷெரீப்

(இஸ்லாமாபாத்)

“எல்லை தாண்டும் பேரணி'யின்' மூலம் வெளிப்பட்ட காஷ்மீர் மக்களின் உணர்வுகளை இந்தியா புரிந்து கொள்ள வேண்டுமெனவும், இம் மக்களை பாகிஸ்தான் அரசு தொடர்ந்து கட்டுப்படுத்துவது சிரமம் எனவும் பாகிஸ்தான் பிரதமர் நவாப் ஷெரீப் கூறியுள்ளார்.

ஜம்மு - காஷ்மீர் விடுதலை முன்னணியினர் எல்லைதாண்டும் பேரணியைக் கைவிட்டதாக அறிவித்ததன் பின்னர் செய்தியாளரிடம் பேசிய திரு. நவாப் ஷெரீப் மேலும் கூறுகையில் எல்லை தாண்டும் பேரணியை பாகிஸ்தான் தடுத்து நிறுத்தி விட்டது என்பதை இந்தியாவும், சர்வதேச சமூகமும்புரிந்து கொள்ள வேண்டும். ஆனால் காஷ்மீர் மக்களின் இத்தகைய உணர்வுகளை ஒரு நாள் அல்லது ஒரு சில நாட்கள் மட்டுமே கட்டுப்படுத்தலாம் என்பதையும் தொடர்ந்தும் கட்டுப்படுத்துவது சிரமம் என்பதையும் இந்தியா ஏற்றுக் கொள்ள வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

# ஆஸாத் காஷ்மீரில் பொது வேலை நிறுத்தம்

## பாக்.கின் போக்கிற்கு கண்டனம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் ஆயுதப் படையினரால் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தால் உயிரிழந்தவர்களுக்கு அனுதாபம் தெரிவித்தும், பாகிஸ்தான் அரசின் போக்கை கண்டித்தும் 'பாகிஸ்தான் கட்டுப்பாட்டிலுள்ள முசாபராபாத்பகுதியில் நேற்று பொது வேலை நிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டது.

இதேவேளை இந்தியாவின் கட்டுப்பாட்டிலுள்ள சிறிநகர் பகுதியில் ஊரடங்கு உத்தரவை மீறி ஊர்வலம் சென்ற ஜே.கே.எல்.எப். ஆதரவாளர்கள் மீது இந்தியப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மூன்று பேர் காயமடைந்துள்ளனர்.

மேலும் சிறிநகரிலிருந்து ஐம்பத்திரண்டு கிலோ மீற்றர் தொலைவிலுள்ள அலசாபாத் பகுதியை நோக்கி பேரணி நடத்த முயன்ற ஒரு கூட்டத்தைக் கலைக்க இந்தியப் பொலிசார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளையும் பிரயோகித்துள்ளனர்.

### காவிரி நீர் பிரச்சினை

# அனைத்து கட்சி கூட்டத்தை தி. மு. க. பகிஷ்கரிக்கும்

(சென்னை)

காவிரி நீர் பங்கீட்டுப் பிரச்சினை தொடர்பாக புதுடில்லியில் இடம்பெறவுள்ள கூட்டத்தில் தமிழ் நாடு அரசு எடுக்க வேண்டிய நிலை குறித்துத் தீர்மானிக்க இன்று முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா கூட்டவிருக்கும் கூட்டத்தை புறக்கணிப்பதென தி.மு.க. தீர்மானித்துள்ளது.

கர்நாடகத்துடன் இனிமேலும் பேச்சு நடத்துவது தமிழக நலன்களுக்குஎதிரானதாக அமைந்து விடும்என்று தமது கட்சிகருதுவதாக தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி நேற்று முன்தினம் சென்னையில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார் பாட்டாளி மக்கள் கட்சியும் இந்தக் கூட்டத்தில் பங்கு பற்றாது என்று அதன் தலைவர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்திருக்கிறார்.

# அமெரிக்க சிறைகளில் 11 இலட்சம் கைதிகள்

(வாஷிங்டன்)

தற்பொழுது அமெரிக்க சிறைகளில் பதினொரு லட்சம் கைதிகள் உள்ளனர் என அமெரிக்க சிறை சீர்திருத்தக் குழு தெரிவித்துள்ளது.

1995 ஆம் ஆண்டில் இவர்களின் எண்ணிக்கை 15 இலட்சமாக அதிகரிக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

உலகில் அதிக எண்ணிக்கையுடைய சிறைக் கைதிகளை சீனா கொண்டுள்ளது இங்கு 12 இலட்சத்து 60 ஆயிரம் பேர் சிறைகளில் இருப்பதா தெரிவிக்கப்படுகிறது அமெரிக்கா இந்த வகையில் இரண்டாம் இடத்தை வகிப்பதாக மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

### அமெரிக்க - ஐரோப்பிய பகுதி

# ஓசோன் படைகளில் ஓட்டை விழுந்துள்ளது

(வாஷிங்டன்)

அமெரிக்கா - ஐரோப்பா பகுதிகளுக்கு மேலாக உள்ள ஓசோன் படையில் ஓட்டை ஏற்பட்டுள்ளதாக சூழலியல் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இதனால் ஓசோன்படையை பாதிக்கும் இரசாயனங்களின் உற்பத்தியை 1995 ஆம் ஆண்டுக்குள் நிறுத்தி விடுவதென அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அறிவித்துள்ளார்.

முன்னர் இந்த இரசாயனங்களின் உற்பத்தியை 2000 ஆம் ஆண்டளவில் நிறுத்துவதென தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்த ஓசோன் படலம் சூரியனில் இருந்து வரும் மனிதனுக்கு தீங்கு விளைவிக்கும் கதிர்களை பூமியைச் சென்றடையாது தடுப்பது ஆகும்.

### விமானத் தகர்ப்பு குறித்து

# பிரான்சுடன் ஒத்துழைக்க லிபியா தயார்

(ஜெனிவா)

பிரான்சு விமானமொன்று குண்டுவைத்துத் தகர்க்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளில் பிரான்சுடன் ஒத்துழைக்க தயாராக இருப்பதாக லிபியா அறிவித்துள்ளது. இதனை ஐ. நா. பொதுச் செயலாளர் பூட்டர்காலி ஜெனிவாவில் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், பிரான்சுடன் சான்றுகளையும் ஆதாரங்களையும் பகிர்ந்துகொள்ள தயாராக இருப்பதாகவும், ஐ நா. வின் தீர்மானங்களோடு ஒத்துழைப்பதாகவும் லிபியா அறிவித்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

1989 ஆம் ஆண்டில் நைசர் நாட்டுக்கு மேலாக பிரான்சு விமானமொன்று குண்டு வைத்து தகர்க்கப்பட்டமை தெரிந்ததே.

# சென்னை நகரில் ஊர்வலம் நடத்தத்தடை

(சென்னை)

சென்னையில் ஆர்ப்பாட்டம், ஊர்வலம், பொதுக் கூட்டம் ஆகியவற்றை முன் அனுமதியின்றி நடத்த நகர காவல் சட்டம்41-வது பிரிவின் கீழ் தடை உத்தரவை பொலிஸ் கமிஷனர் ராஜகோபாலன் பிறப்பித்துள்ளார்

நாளை முதல் பெப்ரவரி 23 ஆம் திகதி முடிய இந்தத் தடை உத்தரவு அமுலில் இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது

### பஞ்சாப் தேர்தல் புறக்கணிக்ககோரிய

# பாதல் சிங், மான் உட்பட 50 சீக்கிய தலைவர்கள் கைது

[டில்லி]

தேர்தல்களைப் புறக்கணிக்கும் படி மக்களுக்கு வேண்டுகோள் விடுத்த ஐம்பதுக்கும் மேற்பட்ட சீக்கிய அரசியல் தலைவர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் பஞ்சாப் மாநிலத்தின் முன்னாள் முதல்வர் ஒருவரும் உள்ளார் என்று பி டி ஐ செய்தி நிறுவனம்கூறியுள்ளது

இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில்எதிர்வரும் 19ஆம்திகதியன்றுபஞ்சாப் சட்டசபைக்கும்,இந்திய நாடாளுமன்றத்திற்குமான தேர்தலின் வாக்குப்பதிவு இடம்பெறவிருக்கின்றது.

இந்தத் தேர்தல்களைப் புறக்கணிக்கும்படிபிரபலஅரசியல் சக்தியான அகாலி தளத்தின் பல்வேறு பிரிவுகளும் பொது மக்களைக் கோரிவருகின்றன இதனையடுத்து முன்னாள் மதல்வர் பிரகாஷ் சிங் பாதல் சிங் ரஞ்சிங்மான் உட்பட ஐம்பதுக்கு மேற்பட்டசீக்கியஅரசியல் தலைவர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மீது தனித்தனியான குற்றச்சாட்டுகள் எதுவும் சுமத்தப்படாத போதும் பயங்கரவாத செயல்கள் தடுப்புச்சட்டத்தின் கீழ் ஆறுமாதங்கள் வரை பொலிசார் தடுப்புக் காவலில் வைக்கமுடியும்என்று பி.டி.ஐ மேலும் தெரிவித்துள்ளது.

இந்தத் தேர்தல்களில் அகாலிதள் பிரிவுகளில் காபூல் சிங் பிரிவு மட்டுமே போட்டியிடுகின்றது. மற்றும் இந்திராகாங்கிரஸ், பாரதீய ஜனதா, கம்யூனிஸ்ட், மாக்சிஸ் கம்யூனிஸ்ட், ஜனதாதள் போன்ற கட்சிகளும் போட்டியிடுகின்றன.

### இந்திய பொருளாதார

# அடிப்படைக் கொள்கையில் மாற்றம் எதுவுமில்லை

## —பி. வி. நரசிம்மராவ்

(டில்லி)

நாடு சுதந்திரம் பெற்ற காலம் முதல் இதற்கு முந்தைய அரசாங்கங்களால் பின்பற்றப்பட்டு வந்த பொருளாதாரக் கொள்கைகள் எதையும் இந்த அரசாங்கம் உண்மையில் அடிப்படை மாற்றம் செய்துவிடவில்லை என்று இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் கூறியுள்ளார்.

செய்தி, ஒலிபரப்பு அமைச்சகத்தைச் சேர்ந்த பல்வேறு தகவல் அறிவிப்பு சாதனங்கள் அதிகாரிகளிடையே நேற்று முன்தினம் புதுடில்லியில் உரையாற்றிய பிரதமர் மேலும் கூறுகையில், அரசாங்கத்தின் புதிய பொருளாதாரக் கொள்கைகள் முந்தைய பொருளாதாரக் கொள்கைகளை ஒதுக்கித் தள்ளுவதாக அமையாது எனவும் மாறியுள்ள சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப பொருந்துமாறு செய்வதற்காக திருத்தி அமைக்கப்பட்ட திட்டம்தான் இதுஎனவும் தெளிவுபடுத்தினார்.

அத்துடன் புதியகொள்கைகளை மனிதனுக்கு மனிதன் என்ற அணுகு முறையில் மனிதாபிமான நோக்கில் மக்களுக்கு எடுத்து விளக்குமாறு தகவல்தொடர்பு சாதனங்களின் அதிகாரிகளிடம் அவர் விண்ணப்பித்துக் கொண்டார்.

# புதுவைக்கும் அழைப்பு

புதுடில்லியில் நாளை மறுதினம் தமிழகம், மற்றும் கர்நாடக முதல்வர்களுக்கிடையே நடைபெறவிருக்கும் காவிரி நீர்ப் பங்கீடு தொடர்பான பேச்சுவார்த்தைகளில் பங்கேற்க புதுவை மாநில முதல்வருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி புதுவை முதல்வர் வி. வைத்திலிங்கம் கூறுகையில் பிரதமர் அலுவலகத்திலிருந்து இது சம்பந்தமான அழைப்பு கிடைத்திருப்பதையடுத்து, இப் பேச்சுக்களில் தாமும் திங்கட்கிழமை புதுடில்லி செல்ல விருப்பதாகத் தெரிவித்தார்.

# தூதுவர்கள் நியமனம்

அண்மையில் சுதந்திரம் பெற்ற பால்டிக் குடியரசுகளுக்கான அமெரிக்காவின் தூதுவர்களை அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் நியமித்துள்ளார்.

லித்துவேனியாவின் தூதுவராக டார்லிப் நோர்மன் ஜோன்சன் என்பவரும், எஸ்தோனியாவின் தூதுவரா றொபட் சீ. பிறாஸ்கர் என்பவரும், லத்வியாவின் தூதுவராக இன்ட்ஸ் எம். சிலிங்ஸ் என்பவரும் அமெரிக்க அதிபரால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

# கொமன் வெல்த் குடியரசிற்கு மருத்துவ, உணவு உதவிகள்

[மொஸ்கோ]

கொமன்வெல்த் குடியரசுகளுக்கு உதவும் பொருட்டு மேற்கு நாடுகள் ஒரு போதும் இல்லாத வகையில் உணவுப் பொருள்களையும், மருந்துகளையும் வழங்கியுள்ளது.

சோவியத் யூனியனின் ஜனாதிபதியாக இருந்த கொர்பசேவ் பெரஸ்ரொய்காவை அறிமுகப்படுத்தியவுடன் மேற்கு நாடுகளின் உதவியைப் பெரிதும் எதிர்பார்த்திருந்தார். ஆனால் மேற்கு நாடுகள் ஒருங்கிணைந்து இவ் உதவியினை வழங்கவில்லை.

சோவியத்யூனியன் பிளவுபடுவதற்கு மேற்கு நாடுகளின் உதவி இடைக்காமல் போனது ஒரு காரணம் எனகொர்பசேவ்'ம், மேற்கு நாடுகளின் உதவிகிடைக்காவிடில் கொமன்வெல்த் நாடுகளில் குழப்பங்கள் ஏற்படும் என ரஷ்ய ஜனாதிபதி பொரிஸ் யெல்சினும் குறிப்பிட்டிருந்தது தெரிந்ததே.

இந்த நிலையில் அமெரிக்காவிலும், இதர நாடுகளிலிருந்து இவற்றை ஏற்றி வரும் விமானங்கள் முன்னாள் சோவியத் குடியரசுகளுக்கு வரத் தொடங்கியுள்ளதாகவும், 18 000 தொன் உணவு, மருந்து ஆகியவற்றை இந்த விமானங்கள் கொண்டு வரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடல் வழியாகவும், தரை வழியாகவும் இதை விடமிகப் பெரும் உதவிகளை வழங்க முடியுமாயினும், அடையாள பூர்வமாகவே இவை அனுப்பப்பட்டுள்ளதாகவும் மேற்குலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# அல்ஜீரியாவில் பல்கலை. மாணவர்கள் போராட்டம்

(அல்ஜீரியஸ்)

அல்ஜீரியாவின் நான்கு பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மாணவர்கள் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியுள்ளனர்.

அடிப்படைவாத இஸ்லாமிய மீட்பு முன்னணியினரும் இன்று ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளனர். இதே வேளை அல்ஜீரியாவின் கடற்படை முகாமொன்றுக்கு அருகே கடற்படையினர் பத்துப் பேர் கத்திக்குத்துக்கு இலக்காகிப் படுகாய முற்றுள்ளனர்.

# இந்திய-இலங்கைஒப்பந்தம் அமைதி ஏற்படுத்தியிருக்கும்

-காமினி திஸாநாயக்கா

(கொழும்பு)

இலங்கை - இந்தியா ஒப்பந்தத்தை முறையாக அமுல் படுத்தியிருந்தால் இன்று நாட்டில் அமைதி ஏற்பட்டிருக்கும் என்று ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தேசிய தலைவர்களில் ஒருவரான காமினி திசாநாயக்கா தெரிவித்துள்ளார்

கொழும்பில் நடைபெற்ற ஆதரவாளர் கூட்டமொன்றில் பேசிய அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் பேசுகையில் கூறியதாவது:

நாட்டில் அமைதியை ஏற்படுத்தவும் புலிகளை அடக்கி ஒடுக்கவுமே முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா முன்னாள் இந்தியப் பிரதமர் காலஞ் சென்ற ராஜீவ் காந்தியுடன்இணைந்து இலங்கை - இந்தியா உடன் படிக்கையைச் செய்தார்.

அந்த உடன் படிக்கையை நடைமுறைப்படுத்து முன்பு இன்றைய ஜனாதிபதி ஆர். பிரேமதாசா பதவிக்கு வந்தார். இன்றைய ஜனாதிபதி அந்த உடன்படிக்கையை முறையாக அமுல் படுத்தியிருந்தால் நாட்டில் அமைதி ஏற்பட்டிருக்கும். புலிகள் ஜனநாயக வழிக்குத் திரும்பியிருப்பார்கள் தமிழ் மக்கள் பிரச்சினைக்கு தீர்வு ஏற்பட்டு அவர்கள் அமைதியாக வாழும் நிலை ஏற்பட்டிருக்கும்.

இன்றைய ஜனாதிபதி பதவிக்கு வந்தபின் உடன் படிக்கையை அமுல் செய்யாமல் புலிகளின் ஆதரவைப் பெற்று இந்திய அமைதிப் படையை வெளியேற்றினர். அரசு செய்த தவறு இது அமைதிப் படை இருக்கும் போதே புலிகளைச் சமாதானப் பேச்சுக்கு அழைத்திருந்தால் அவர்கள் நிச்சயம் சமாதானப் பேச்சு வார்த்தைக்கு இணங்கியிருப்பார்கள்.

ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டுமானல் நாட்டு மக்கள் அனைவரும் அரசியல், ஜாதி, மத, இன வேறுபாடுகளை மறந்து அரசுக் கெதிராகப் போராட வேண்டும் என்று காமினி திசாநாயக்கா கேட்டுக் கொண்டார்.

## யாழ்ப்பாணத்தில் சர். செஞ்சிலுவை உயர் அதிகாரி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க உயர் அதிகாரியான பயரே வெத்தாச் யாழ்ப்பாணம் வந்துள்ளார். அவர் இங்குள்ள நிலைமைகளை நேரில் கண்டறிவார்.

அத்துடன் விடுதலைப்புலிகளின் தலைவர்களையும் சந்திப்பாரென தெரியவருகிறது.

## அரசியல் கட்சிகளுக்குள் ஜே. வி. பி. ஊடுருவ முயற்சியாம்

(கொழும்பு)

அரசியல் கட்சிகளுக்குள் ஊடுருவ ஜே. வி. பி. திட்டமிட்டிருப்பதாக பாரிசில் கைதான இரு இலங்கையர் மூலம் தகவல் வெளியாகியுள்ளது. இதுபற்றி மேலும் தெரியவருவதாவது தற்போது நசுக்கப்பட்ட நிலையில் இருக்கும் ஜே. வி. பி. இயக்கத்தின் அங்கத்தவர்கள் அரசியல் கட்சிகளுக்குள் ஊடுருவவும், புலிகள் இயக்கத்தின் பாணியைப் பின்பற்றி நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் திட்டமிட்டிருப்பது பாரிசில் கைதான இலங்கையரிடமிருந்து பெறப்பட்ட ஆவணங்கள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது என்று தினகரன் பத்திரிகை நேற்று முன்தினம் செய்தி வெளியிட்டது.

## திருமலை ரெலோ காரியாலயம் மீது தாக்குதல்

(திருக்கோணமலை)

திருமலை ராஜவரோதயம் வீதியிலுள்ள ரெலோ இயக்கத்தின் மாவட்ட காரியாலயத்தை கடந்த திங்கட்கிழமை இனந்தெரியாத ஆயுதம் தாங்கிய கோஷ்டி ஒன்று தாக்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

இரவு எட்டு மணியளவில் திருமலை சந்தைப் பகுதியில் இருந்து வந்த ஐம்பது பேர் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும்,

உபாலி என்ற ரெலோ அங்கத்தவர் முகத்தில் வெட்டுக் காயங்களுக்குள்ளாகி வைத்திய சிகிச்சை பெற்று வருகின்றார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## வைத்தியக் குறைபாடு மடு அகதிகள் அவதி

(வவுனியா)

மடுதிருப்பதி அகதி முகாமில் வாழும் அகதி மக்கள் மத்தியில் வைத்திய குறைபாடும் தண்ணீர்த்தட்டுப்பாடும் தலைதூக்கியுள்ளன.

இக்காரணங்களினால் இம்முகாமில் உள்ள சுமார் 25,000 அகதி மக்கள் பெரும் கஷ்டத்தை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இம்முகாமில் உள்ளவர்களில் பலர் மலேரியாக் காய்ச்சல் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர். தகுந்த சிகிச்சை வசதி இல்லாத காரணத்தினால் பலர் பாதிப்படைந்துள்ளனர்.

தண்ணீர்த் தட்டுப்பாட்டினால் அகதி மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை இருந்து வருகிறது.

பல அகதிமக்கள் தண்ணீர்க் குறைபாட்டால் மோட்டைகளில் தேங்கியிருக்கும் நீரிலேயே குளிக்கிறார்கள் என்பது சுட்டிக்காட்டத்தக்கது. (தி)

## கிளிநொச்சி மாவட்டத்தில் ஆசிரியர் பற்றாக்குறை

(வடமராட்சி கிழக்கு)

கிளிநொச்சிமாவட்டப் பாடசாலைகளில் ஆசிரியப்பற்றாக்குறை அதிகரித்துள்ளது.

அம்மாவட்டத்தில் எண்ணூறு ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகின்றது.

கணிதம், விஞ்ஞானம் ஆங்கிலம் ஆகிய பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களின் பற்றாக்குறையே இங்கே அதிகமாகக்காணப்படுகின்றது. (36)

## தமிழர் காணாமல்போதல் வவுனியாவில் அதிகரிப்பு

(வவுனியா)

வவுனியா நெளுக்குளம் சிறிலங்கா இராணுவத்தின் பாதுகாப்பில் உள்ள அகதிமுகாமில் தமிழ்ப் பொதுமக்கள் கடத்தப்பட்டுக் காணாமல் போகின்றனர்.

இரவுவேளைகளில் இம்முகாமிற்கு வரும் இராணுவ உளவாளிகள் விசாரணைக்கென பலரை அழைத்துச் செல்கின்றனராம். அவர்கள் பின்னர் விடுவிக்கப்படுவதில்லையாம். இதனால் இம்முகாமில் தங்கியிருக்கும் அகதி மக்கள் மத்தியில் பெரும் பீதி நிலை ஏற்பட்டுள்ளது.

சமீபத்தில் திருக்கோணமலைக்கு வந்துசேர்ந்த அகதி மக்களில் வவுனியா மாவட்டத்தைச்சேர்ந்தவர்கள் வவுனியா ரயில் நிலைய அகதிமுகாமில் இருத்திவைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதுவித அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படவில்லை என்று அறியப்படுகிறது. (தி)

## தேயிலை கொள்வனவை ரஷ்யா தற்காலிக நிறுத்தம்

(கொழும்பு)

பொருளாதார நெருக்கடி காரணமாக ரஷ்ய சம்மேளனம் இலங்கையிடமிருந்து தேயிலை கொள்வனவு செய்வதைத் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ரஷ்யா சம்மேளனத்துக்கான தூதுவர் யுயிர் வினோஜிரடோவ் தெரிவிக்கையில், வெளிநாட்டுக் கொள்கை தொடர்பாகவும் வர்த்தக பொருளாதார அபிவிருத்தி தொடர்பாகவும் பேச்சுவார்த்தை நடத்தினேன் என்றும்

ரஷ்ய சம்மேளனம் பண்டமாற்று வியாபாரத்தையே விரும்புகின்றது என்றும் தெரிவித்தார்.

## அவுஸ்திரேலியா 3 லட்சம் டாலர் உதவி

(கொழும்பு)

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் நிவாரணப் பணிக்கென மூன்றுலட்சம் டாலரை அவுஸ்திரேலியா உடனடியாக வழங்கியுள்ளது. அரச சார்பற்ற மூன்று தொண்டர் நிறுவனங்களுக்கு ஊடாக இந்நிதி வழங்கபடுமென கொழும்பிலுள்ள அவுஸ்திரேலிய தூதுவரகம் நேற்று முன்தினம் அறிவித்தது.

## கூட்டத்திற்கு வராவிடில் தண்டம் 50ரூபா

(குருநகர்)

கூட்டத்திற்கு வருகை தராத சங்க உறுப்பினர்களிடம் இருந்து தண்டமாக ரூபா50/அறவிடப்படும்.

இவ்வாறான எச்சரிக்கையுடன்கூட்டத்திற்கு அறிவித்தல் விடுத்த சங்கம் வேறெதுவுமல்ல. யாழ்-பிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கம்தான்.

கடந்தபுதன்கிழமைமாலை-3 மணிக்கு யாழ்-இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் மேற்படி சங்கத்தின் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்ட துண்டுப் பிரசுரத்திலேயே இவ்வாறான எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. [21

### சிறுவர் பராமரிப்பு

## சேவை புரியும்தொண்டர்க்கு உளவியல் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் சிறுவர் பராமரிப்பில் ஈடுபட்டிருக்கும் தொண்டர்களுக்கு உளவியல் ரீதியிலான பயிற்சி வழங்குவதற்கு ஆலோசிக்கப்பட்டு வருகிறது

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் லண்டன் அலுவலகத்தைச் சேர்ந்த சமூகசேவை அதிகாரி திருமதி பாபரா யாழ்ப்பாணத்தில் உள்ள சிறுவர் பராமரிப்பு நிலையங்களை நேரடியாகச் சென்று அவதானித்ததைத்தொடர்ந்து மேற்படி பயிற்சி வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்திருக்கிறார் இதனால் இப்பயிற்சியை வழங்குவது பற்றி தற்போது ஆலோசிக்கப்பட்டுவருகிறது (க)

### ஜனவரியில் மட்டும் 865

## கொழும்பில் வீதிவிபத்து அதிகரிப்பு; பொலிஸ் அறிவிப்பு

(கொழும்பு)

1992 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மாத்திரம் கொழும்பு நகரில் 865 வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதாகக் கொழும்புப் போக்குவரத்துப் பொலிஸ் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்துக்கள் கடந்த வருட ஜனவரி மாதத்தைவிட அதிகமானது என்றும், கறுவாக்காட்டுப் பகுதியிலேயே அதிகளவிலான விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன என்றும், கறுவாக்காட்டில் 107 விபத்துக்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன என்றும் பொலிசார்தெரிவித்துள்ளனர் இவ்விபத்துக்களில் பத்து மரணத்தை ஏற்படுத்தக்கூடிய விபத்துக்களாக இருந்துள்ளன.

### கம்பன் விழா

## இரண்டாம்நாள் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

கம்பன் விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் கலாநிதி சி. க. சிற்றம்பலம் அவர்கள் தலைமையில் இடம்பெறவுள்ளது. காலை ஒன்பது மணிக்கு திரு.க. சிவராமலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெறும் ஆய்வரங்கில் ''தமிழ்க் கவிதை மரபில் கம்பனின் தனித்துவம்'' என்னும் பொருள் பற்றி பண்டிதர் க. சச்சிதானந்தம் அவர்களும், ''கம்ப காவியக்கட்டமைப்பு'' என்னும் பொருள் பற்றிபேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களும் உரையாற்றவுள்ளனர்.

மாலை நிகழ்ச்சிகளுக்குகவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்கள் தலைமைதாங்குகின்றார். ''தந்திரத்தால் கம்பனிலே தனியெழுத்தில் தலைப்பெடுத்து அந்தரங்கம் சொல்வோம் அதில்'' என்ற தலைப்பிலான கவியரங்கமும் இடம் பெறுகின்றது.

## கலந்துரையாடல்

(பருத்தித்துறை)

தமிழீழஆய்வுநிறுவனத்தால் நடாத்தப்படவுள்ள 'குடாநாட்டின் நீர்வளங்கள் சூழல் பேணுதல்' பற்றிய கலந்துரையாடல் 17ம் திகதி (17-2-92 யாழ்ப்பாண பல்கலைக்கழக தொல்பொருள் நூதனசாலை மண்டபத்தில் பேராசிரியர் வி.க,கணேசலிங்கம் தலைமையில் நடைபெறுமென தமிழீழ ஆய்வு நிறுவனப் பொறுப்பாளர்அறிவித்துள்ளார் (25)

## மெய்வல்லுனர் போட்டி

(வடமராட்சி கிழக்கு)

பளை கொத்தணியில் உள்ள சோரன்பற்று கணேசா வித்தியாலயத்தின் வருடாந்த மெய்வல்லுனர் போட்டி கடந்த வெள்ளிக் கிழமை (07-02-1992) நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் திருமதி அரியரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில், முதன்மை விருந்தினராக கிளிநொச்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. பொன். சபாபதி கலந்து கொண்டார்.

இப் போட்டியில் மில்லர் இல்லம் முதலிடத்தையும், திலீபன் இல்லம் இரண்டாம் இடத்தையும், போர்க் இல்லம் மூன்றாமிடத்தையும் பெற்றது. (36)

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

(பருத்தித்துறை)

வடமராட்சி சுருக்கெழுத்து கழகத்தின் 4ஆவது சான்றிதழ் வழங்கும் வைபவமும், ''ஷோல்ஸ் முத்தையா'' தட்டச்சு வார விழாவும் 17ஆம் திகதி அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் கழகத் தலைவர் திரு. சி. குலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (25)

## தொற்று நோய் அதிகரிப்பு

(வவுனியா)

வன்னிப் பகுதிகளில் தொடர்ந்து வைத்திய வசதி பற்றாக் குறைவினால் பலர் பாதிப்படைந்துள்ளனர்.

இப்பகுதிகளில் தொற்று நோய்கள் அதிகரித்திருப்பதனாலும், திடீர்க்காயங்கள், பிரசவ வேதனை போன்ற காரணங்களினாலும் பலர் பாதிப்படைந்துள்ளனர்.

வவுனியா நகரப்பகுதியிலிருந்து தனியார் வைத்தியர்கள் மருத்துவப் பொருள்கள் கொண்டுவருவதற்கு இராணுவம் தடைவிதித்துள்ளது. இதனால் மருத்துவ சிகிச்சைகளை ஒழுங்காக மேற்கொள்ளமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான காரணங்களினால் பலரும் அநியாய மரணங்களை எதிர் கொள்ள நேரிடுகிறது. (தி)

## பயிற்சி நெறி

சமுதாய நலனும் சமூக சேவையும் சம்பந்தமான பயிற்சி நெறியொன்று இன்று காலை பத்து மணியளவில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணப் பணிமனையில்ஆரம்பமாகவுள்ளது. வைத்திய கலாநிதி சி. எஸ். நச்சினார்க்கினியன் இப் பயிற்சி நெறிக்கு தலைமைதாங்கவுள்ளார்.

## சிந்தனைக்கு

சிறந்த அறிவுரையை ஏற்பது, சொந்த ஆற்றலை வளர்ப்பதேயாகும்.

- யொஹன் கேத்தே


# ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 15-02-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 05


# பேராசிரியர் சோல்க்கின் தீர்க்கமான ஆலோசனை

"யாழ்ப்பாணம் மீதான யுத்தம் அரசாங்கத்திற்குப் பேரழிவை ஏற்படுத்தும், போர்த்திறன் மிக்க புலிகளுடன் மட்டுமல்ல புலிகளுக்கு ஆதரவாக அணி திரண்டு நிற்கும் பொதுமக்களுக்கு எதிராகவும் சிங்கள இராணுவம் போராட வேண்டி வரும்" இவ்வாறு சுவீடனைச் சேர்ந்த பேராசிரியர் பீட்டர் சோல்க் சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவிற்கு எழுதிய கடிதத்தில் எச்சரித்துள்ளார்.

பேராசிரியர் பீற்றர் சோல்க்கின் எச்சரிக்கையானது யதார்த்தபூர்வமானது. இன்றைய நிலையைப் பிரதிபலிப்பதும் ஆகும். மேலும், கடந்தகால வரலாற்றை நினைவில் நிறுத்தி, நிகழ்காலத்தைக் கணிப்பீடு செய்ததும் ஆகும். இதனைச் சிறிலங்கா அரசாங்கம் கவனத்திற் கொள்ளாது தப்பான கணிப்பீடு ஒன்றுடன் போரைத் தொடுக்குமானால், அதற்கான விலையையும் சிறிலங்கா அரசாங்கம் கொடுத்தே ஆக வேண்டும்.

இந்திய அரசாங்கம் இலங்கைத் தமிழர் விவகாரத்தில் நேரடியாகத் தலையிட முற்பட்ட போது, தமிழீழப் பிரதேசத்தின் நிலை தொடர்பாக கொடுக்கப்பட்ட தகவல்களும், ஆலோசனைகளும் தவறாகவே இருந்தன. இதனால், இந்தியாவின் கணிப்பீடும் பிழையானதாகவே இருந்தது.

"சாரம் கட்டிய 2000 பொடியள்" மட்டுமே புலிகள் இயக்கத்தில் இருப்பதாகவும், அதிலும் கணிசமான எண்ணிக்கையினரிடம் ஆயுதங்கள் இல்லை எனவும் தகவல் தெரிவிக்கப்பட்டது. அத்தோடு, சிங்கள இராணுவத்திடம் இருந்து பாதுகாப்பு வழங்குவதால் புலிகளுக்கு ஓரளவு மக்கள் உதவுகின்றார்கள். நீங்கள் மக்களுக்கு பாதுகாப்பு வழங்கினால் புலிகளை சில தினங்களிலேயே ஒழித்து விடலாம் எனவும் ஆலோசனை வழங்கப்பட்டது. ஆனால், ஆலோசனை வழங்கியவர்கள் புலிகளின் போரிடும் திறன் அவர்களின் மனோபலம், தமிழ் மக்களின் சுதந்திர உணர்வு புலிகள் மக்களுடன் கொண்டுள்ள உறவு என்பனவற்றைப் பற்றி எதையும் கூறவில்லை.

இதன்விளைவு, இந்திய இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் இடையில் போர் தொடங்கிய பின்னரே இவற்றை இந்தியா புரிந்து கொள்ள வேண்டி வந்தது. இதனால், அவர்கள் புலிகளுடனான போரில் வெற்றி பெறமுடியாமல் போனதோடு சலிப்படையவும் வேண்டி ஏற்பட்டது.

"புலிகளுக்கு குளிருக்குப் போர்வையோ, அன்றி உணவோ எதுவும் தேவையில்லை. தாங்களே தங்கள் ஆயுதங்களைக் கடலுக்குள் கூட புதைத்து வைத்திருந்தனர். பின்னர் இருட்டில் கூட அவற்றைத் தேடி எடுத்து விடுவார்கள். அவர்கள் ஈழம் என்ற இலட்சியத்தை எப்போதும் விட்டுக் கொடுக்கவில்லை" இவ்வாறு புலிகளின் மனோ வலிமையையும் போராட்டத்தின் மீதுள்ள பற்றையும் வெளியிட்டவர் தமிழீழ மண்ணில் இருந்த இந்திய இராணுவத்திற்குத் தளபதியாக இருந்த ஜெனரல் ஹர்கிரட்சிங்.

இதேவேளை, வேறொரு தளபதி கருத்து வெளியிடுகையில் "மக்களின் ஆதரவு எதுவுமே இந்திய இராணுவத்திற்குக் கிடைக்கவில்லை. இதனால் மக்களிடம் இருந்து புலிகளை இனங்காண முடியவில்லை" என்றார்.

இவ்வாறாக இந்திய இராணுவத்தினருக்கு ஏற்பட்ட பாடங்களை மறந்து சிறிலங்கா அரசாங்கமும். யாழ்குடாநாட்டின் மீதுபடை எடுத்துஇராணுவவெற்றியீட்டுவதன் மூலம் இனப்பிரச்சினையைத் தீர்க்கலாம் எனக் கணிப்பீடு செய்யுமானால், அது தப்புக்கணக்காகவே இருக்கும்.

இதேவேளை தமிழ்ப் பிரதேசத்தில் இருந்து தமது சொந்தநலனுக்காக வெளியேறியவர்கள், வெளியேற்றப்பட்டவர்கள் கொடுக்கும் தவறான தகவல்களின் அடிப்படையிலும், இராணுவம் தனது தோல்விகளை மறைப்பதற்கும், தனது வசதிகளைப் பெருக்கிக்கொள்ளும் நோக்கத்திற்காகவும்கொடுக்கும் தகவல்களையும் வைத்துக் கொண்டு சிறிலங்கா இராணுவம் குடா நாட்டின் மீது போரைத் தொடுக்குமானால், அதற்காக சிறிலங்கா இராணுவத் தரப்பும், அரசியல் வாதிகளும் பின்னர் வருந்தவேண்டி ஏற்படும்.

# புலிகள் தனியானவர்கள் அல்ல; ஒரு திரண்ட மக்கள் கூட்டம்

திரு. சௌமியமூர்த்தி தொண்டமான் மேற்கொள்ளும் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு வழங்குமாறு ஜனாதிபதியாகிய உங்களிடம் நான் வேண்டுகோள்விடுக்கின்றேன்.

டிசம்பர் 1991 இல் யாழ்ப்பாணம் சென்றிருந்தபோது நான் விடுதலைப் புலிகள் தலைவர்களைச் சந்தித்தேன். தொண்டமானின் முயற்சிகளுக்கு வரவேற்பும் உணர்வுபூர்வமான ஆதரவும் இருப்பதை அவதானித்தேன். இந்தப் பேச்சுவார்த்தைகள் தொடங்கப்படுவதற்கு உங்களினதும் எதிர்க்கட்சிகளினதும் மனப்பூர்வமான ஆதரவு தேவை என்பது மட்டுமே முன் நிபந்தனையாக உள்ளது.

தொண்டமானுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் போர்நிறுத்தத்தையும் - சமாதானததையும் ஏற்படுத்துவதற்கான கடைசிச் சந்தர்ப்பமாக இருக்கக்கூடும். இந்தச் சந்தர்ப்பம் தவறவிடப்படுமேயானால் நன்கு பயிற்றப்பட்ட விடுதலைப் புலிகளோடு மட்டுமன்றி தமிழ் பொதுமக்களோடும், சிறிலங்கா இராணுவத்தினர் போரிட வேண்டி ஏற்படும். விடுதலைப் புலிகளுக்கு பலமான ஆதரவு தற்போதும் பொதுமக்களிடையே உண்டு, பொருளாதார தடைவிதிப்புக்களும், கண்மூடித்தனமான குண்டுவீச்சுக்களும் தமிழ்ப் பொது மக்களுக்கிடையிலே பட்டினியையும் போசாக்கின்மையையும் ஏற்படுத்தியதே தவிர விடுதலைப் புலிகளுக்கெதிராக பொதுமக்களைத் திரும்பச் செய்யவில்லை, எனவே அதிகம் பாதிக்கப்பட்டது யார் என்பது கேள்வியாகிறது,

விமானப்படை விமானங்களும் குண்டுவீச்சு விமானங்களும் குண்டுமழை பொழிகின்றன. எறிகணைகள் பலாலி முகாமிலிருந்து ஏவப்படுகின்றன. உலங்கு வானூர்திகள் துப்பாக்கிச் சூடுகளை நடாத்துகின்றன. நேபாம் குண்டுகள் ஆலயங்கள்மீதும் பாடசாலைகள்மீதும் மற்றும் பொதுச் சொத்துக்கள்மீதும் வீசப்படுகின்றன. ஆனால் விடுதலைப் புலிகளின் முகாம்கள் இவற்றினால் பாதிக்கப்படுவது மிக அரிது. விடுதலைப் புலிகளின் எண்ணங்களோடு ஒத்துப் போகாதவர்கள்கூட இத்தகைய தாக்குதல்கள் எங்கிருந்து நடத்தப்படுகிறது என்பதை அறிவார்கள் அனைத்து மக்களும் அகதிகளாக மாறவேண்டியநிலை ஏற்படுகிறது. இரவும் பகலும் விமானக் குண்டுவீச்சுக்கள், நீண்டதூர எறிகணைகள், உலங்கு வானூர்திகளின் தாக்குதல்கள், பீரங்கிப் படகுகளின் தாக்குதல்கள் கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் மேலாக நடத்தப்படும்போது நிலைமை எவ்வாறு இருக்கும் என்பதை விளக்கவேண்டியதில்லை. பொருளாதாரத்தடை விடுதலைப்புலிகளை மட்டுமன்றி தமிழ்மக்கள் அனைவரையுமே பாதிக்கின்றது.

1992 ஜனவரியிலோ அல்லது அதன் பின்னரோ யாழ்ப்பாணத்தின் மீது நடத்தப்படும் இராணுவ ஆக்கிரமிப்பு அயர்லாந்தின் பெல் பாஸ்ற் போன்ற நிலைமையையே ஏற்படுத்தும். இது பல பத்தாண்டுகளுக்கு நீடிக்கும். கண்ணிவெடிகளிலும் தாக்குதல்களிலும் வெடி குண்டுகளிலும் நூற்றுக்கணக்கான சிங்கள சிப்பாய்கள் இறக்க நேரிடும். சரியான சிவில் நிர்வாகத்தை அமுல்படுத்த முடியாது. முழு இலங்கைக்குமே பொருளாதார நஷ்டங்கள் ஏற்படும். இராணுவம் மூன்று மாத காலத்தினுள் யாழ்ப்பாணத்தை தக்க வைக்க முடியும் என்பதை எவரும் நம்ப முடியாது. இத்தகைய கருதுகோள் தவறானதும் ஆபத்தானதும் என்பதை திருக்கோணமலை, மட்டக்களப்பு அனுபவங்கள் எடுத்துக் காட்டும். இந்த நகரங்கள் தமது கட்டுப்பாட்டிலேயே இருப்பதாக இராணுவம் கூறுகிறது. ஆனால் பெல்பாஸ்ற்றைப் போல அடிக்கடி தாக்குதல்களும் யுத்த சூழல்களும் நீண்ட காலம் நிலவுவதை மறுக்க முடியாது. உலகில் உள்ள மனித உரிமை அமைப்புகளின் அலுவலகங்களில் தென்னிலங்கையில் காணாமல் போவோரிலும் பார்க்க கிழக்கில் நீண்டு செல்லும் காணாமல் போவோரின்பட்டியலே முதலிடம் பெறுகிறது

யாழ்ப்பாணத்திற்கென ஒரு வரலாறு உண்டு. நீங்கள் ஒரு உரையில் சுட்டிக் காட்டியதைப் போல சிங்கள அரசியல்வாதிகள் சிலரால் 1981 இல் பொது நூலகம் எரிக்கப்பட்டது போன்ற கலாசாரப் படுகொலைகள் நடந்துள்ளன அதைத் தொடர்ந்து பொதுப் போக்குவரத்து, வங்கிகள், சுகாதாரத்துறை, மீன்பிடித்துறை. பாடசாலைகள், கூட்டுறவு அமைப்புகள், மாநகரசபை சொத்துக்கள் மற்றும் அரச சொத்துக்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. இவற்றின் மொத்தப் பெறுமதி பலகோடி ரூபாவாகும்.

மேலும் தமிழ் மக்கள் அனுபவித்து வரும் பல இன்னல்களுக்கும் முடிவு கட்ட இதுவே நல்ல தருணமாகும் தொண்டமானின் முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவிப்பதன் மூலம் இதனை நீங்கள் செய்பலாம். ஆனால் தமிழ் மக்கள் சிங்கள சமாதானத்தை ஏற்கப்போவதில்லை என்பதையும் நீங்கள் மறந்துவிட வேண்டாம். தமிழ் மக்கள் நீதியான சமாதானத்தையும், பாதுகாப்பையும் விரும்பும் அதேவேளை அந்த நீதி மறுக்கப்பட்டால் மீண்டும் போரிடும் உரிமையும் வலிமையும் இருக்க வேண்டுமென்றே விரும்புகிறார்கள். ஏறத்தாழ 4000 க்கும் அதிகமான விடுதலைப்புலிகள் ஆண்களும் பெண்களுமாக 1982 முதல் இன்றுவரை வீரமரணத்தை தழுவிக் கொண்டுள்ளார்கள். நீங்கள் இவர்களைப் பயங்கரவாதிகள் என்று சுலபமாகக் கூறலாம். ஆனால் இவர்களுக்கும் தாய், தந்தையரும் சகோதர சகோதரிகளும் இருக்கின்றார்கள். அவர்கள் தனித்தவர்களாக இல்லை. திரண்ட மக்கள் கூட்டமாக இருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் திடுக்கிடும் வாழ்க்கை அனுபவங்களைக் கொண்டவர்களாக இருக்கிறார்கள்.

சிங்கள சிப்பாய்களிடம் இருப்பதைப் போன்ற போர் வெறியில்லை. ஆனால் உணர்வுபூர்வமாக போரிடுவதை விரும்புகின்றார்கள் 'பொல்பொட்' பிரசாரத்தினால் மயங்கக்கூடியவர்களாக அவர்கள் இல்லை. விடுதலைப்புலிகளைச் சேர்ந்த 4000 பேரைவிட ஆதரவாளர்கள், பொதுமக்கள 15,000 பேர் வரையில் கொல்லப்பட்டுள்ளனர் அல்லது ஊனமடைந்துள்ளனர். இவர்களை விட 50,000 ற்குமேற்பட்டோர் விதவைகளாகவும், அநாதைகளாகவும் உள்ளனர். இவையெல்லாம் இந்தப் போரின் விளைவுகள். தனிமனிதனுடைய வாழ்க்கைச் சுமையையும், சோகத்தையும் விளங்க வைப்பதற்கு இந்த எண்ணிக்கைகள் துணைபுரியப்போவதில்லை. உங்களது இராணுவம் விடுதலைப்புலிகளோடு மட்டுமல்ல அவர்களது உறவினர்கள் நண்பர்கள் மற்றும் இளைய தலைமுறையினரோடு போர் புரிய வேண்டும். போராடும் விடுதலைப்புலிகள் நான்காவது தலைமுறையைச் சேர்ந்தவர்கள். இன்று மரணத்துக்கும் அஞ்சாமல் போரிடத் தயாராகியுள்ளனர். யாழ்ப்பாணத் தெருக்களில் காணப்படும் நினைவுச் சின்னங்கள் இறந்த காலத்தை நினைவூட்டுவதாக மட்டுமல்லஎதிர்கால நம்பிக்கைக்கு உரியவையாகவும் விளங்குகின்றன.

இத்தனை குண்டு வீச்சுக்களுக்கும், துப்பாக்கிச் சூடுகளுக்கும் மத்தியில்எரியுண்டபொது நூலகத்தின் முன்பாக இருக்கும் சரஸ்வதிசிலையைக்கண்டு நான் மகிழ்ச்சியடைந்தேன். அது யாழ்ப்பாணத்தில் தற்போது ஒவ்வொரு குடும்பக்கவரினதும் குறியீடாகஎனக்குப்பட்டது சூரியமறைவுக்குப்பின் வெளிச்சமில்லாத வேளையிலும் கல்வியிலும், தமிழ்க் கலாசாரத்தைக் காப்பதிலும் அந்த மக்கள் கொண்டுள்ள அக்கறையைப் புலப்படுத்தியது யாழ்ப்பாணம் கலைமகளின் குடியிருப்பு என்று சொல்லலாம். பனைமரங்கள் கூட முறிந்து விழலாம் ஆனால் கல்வி அழியாத செல்வம் என்பது யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கை தொடர்வதற்கான நம்பிக்கையாகும். ஆகவே யாழ்ப்பாண மக்கள் தமது கலாசாரத்தைப் பாதுகாப்பதில் மிகுந்த அக்கறையுடையவர்கள் என்பதை உங்களது இராணுவத்திற்கு எடுத்துச் சொல்லுங்கள் இவை அப்பால் அனைத்துக்கும் இராணுவம் பிரதேசங்களை விடுவிக்க முற்பட்டால் அங்கு வாழ்வதற்கு மக்கள் இருக்க மாட்டார்கள் என்பதை தீவுப்பகுதி அனுபவங்கள் உங்களுக்குப் புரிய வைத்திருக்கும் ஆரியரத்தினா தலைமையில் இயங்கும் சர்வோதயம் மணலாறுப்பகுதியிலும் திருக்கோணமலையிலும் செய்வதைப் போல இந்த வெற்றுக் கிராமங்களில் சிங்களவர்களைத் தான் குடியேற்றவேண்டிவரும் எனவே தான் காரிய சாத்தியமானவற்றை கடைப்பிடிக்கக் கூடிய அரசியல் வாதி என்ற வகையிலும், பௌத்த மத நம்பிக்கையில் ஊறியவர் என்ற வகையிலும் இந்த வேண்டுகோளை உங்களுக்கு விடுத்தேன். சர்வதேச மன்னிப்புச் சபையின் வேண்டுகோளுக்கு செவி சாய்த்ததைப் போல இதையும் செவிமடுப்பீர்களென நம்புகிறேன். சமாதானம் என்பது விட்டுக் கொடுப்புகளின்றி ஏற்படப் போவதில்லை தமிழ் மக்களுக்கு தேவையான எல்லாவற்றையும் வழங்குவதன்மூலம் சமாதானத்தை நிலை நாட்டுவீர்களென எதிர்பார்க்கிறேன்

சுவீடன் நாட்டிலுள்ள உப்சாலா பல் கலைக்கழகத்தில் பேராசிரியராக கடமையாற்றும் திரு. பீற்றர்சோல்க் அண்மையில் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எழுதியுள்ளகடிதத்தின் பிரதானபகுதிஇது இவர் யாழ்ப்பாணம் உட்பட தமிழ்ப்பகுதிகளுக்கு டிசம்பர்91ல் விஜயம் மேற்கொண்டிருந்தார். திரு. பீட்டர்சோல்க் இலங்கைத்தமிழ்மக்களின் போராட்டத்துடன் நீண்ட கால தொடர்புடையவர் என்பதும் இலங்கையில்பௌத்த சிங்கள மேலாண்மை பற்றி ஆய்வுகள் செய்து நூல் வெளியிட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கருத்தரங்கு

(மண்டைதீவு)

வட பிராந்திய ஊழியர் சங்கத்தின் மாதாந்த கருத்தரங்கு கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

இதில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்கள் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொள்ளவுள்ளனர்.

ஊழியர்கள் அனைவரும் இந்தக் கருத்தரங்கில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (88)

### இலங்கைத் தமிழர்

# பிரச்சினையைத் தீர்க்குமாறு தி. க. மாநாட்டில் தீர்மானம்

(சென்னை)

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குப் பரிகாரம் காண வலியுறுத்தியும், கர்நாடகத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணக் கோரியும் சேலத்தில் நேற்று நடந்த திராவிடக் கழக மாநில மாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

சட்டப்படி தமிழ் நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய அளவுக்குக் காவிரி நீர் கிடைக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று மத்தியஅரசை மாநாடுகேட்டுள்ளது புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் நூல்களை மலிவு விலையில் விற்க்க நடவடிக்கை எடுக்குமாறும் இந்த மாநாடு மாநிலஅரசைக் கேட்டுள்ளது.

### உலகத்தமிழர்

## பண்பாட்டுக் கழகத்தின் ஆலோசனைக் கூட்டம்

(கொழும்புத்துறை)

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் சர்வதேச மாநாடு தொடர்பாக ஆராய்வதற்கான ஆலோசனைக் கூட்டமொன்று இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணயளவில் இலங்கைக் கிளையின் தலைவர் திரு. ஆ. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டம் இல. 33 பருத்தித்துறை வீதி (ஆரியகுளம் சந்தி) யில் உள்ள யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனப் பணிமனையில் நடைபெறும் எனக்கிளை இணைச் செயலாளர் திரு சி.சி. வரதராசா தெரிவித்துள்ளார். (24)

## 'பெண் அடிமை' நாட்டிய நாடகம்

(புங்குடுதீவு)

அடுத்த மாதம் எட்டாம் திகதி கொண்டாடப்படவிருக்கும் 'சர்வதேச மகளிர் தினத்தை' முன்னிட்டு 'பெண்ணடிமை' என்னும் நாட்டிய நாடகம் தற்போது குடாநாடெங்கும் பரவலாக வீதிகளில் நடாத்தப்பட்டு வருகின்றது. விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகத்தினரால் நடாத்தப்பட்டு வரும் இந் நாட்டிய நாடகம் மூட நம்பிக்கைகளினாலும் சீதனக் கொடுமையினாலும் பெண்கள் மீது மேற்கொள்ளப்படும் பல்வேறு அடக்கு முறைகளுக்கு எதிராகவும் பெண்கள் எவ்வாறு கிளர்ந்தெழுந்து போராட வேண்டும் எனபதை விளக்குவதாகவும் அமைந்துள்ளது. (22)

## புதிய தொலை தொடர்புசாதனம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தற்பொழுது புதிய தொலைத்தொடர்பு சாதனங்களைப் பூட்டிவருகின்றது.

மேலும் கொழும்புடனான தொடர்பு இதுவரை தெளிவாக இல்லாமையினாலே ஜெனிவாவிலிருந்து கொண்டு வரப்பட்ட தொலைத்தொடர்புசாதனங்களை தற்பொழுது பூட்டிவருகின்றனர். இத் தொலைத்தொடர்பு சாதனங்களைப் பூட்டுவதற்கு வெளிநாட்டுப் பிரதிநிதி இங்கு வந்துள்ளமை குறிட்பிடத்தக்கது (75)

### ஹெல

மதியின்றி சிறிமாவோ பண்டாரநாயக்கா அன்னையர் முன்னணியை அமைத்தலைச் சுட்டிக்காட்டி தமது தரப்பிற்கு நியாயம் கற்பித்ததாகத் தெரிய வருகின்றது.

## முத்திரையிடக் கோரிக்கை

யாழ். மாநகர சபைக்குட்பட்ட குருநகர், பாஷையூர், நாவாந்துறை, சின்னக்கடைச் சந்தை வியாபாரிகள் இம்மாதம் 19 ஆம், 20 ஆம், 21 ஆம் திகதிகளில் தத்தமது அளவை நிறுவை சாதனங்களை யாழ். செயலகத்திற்கு எடுத்துச் சென்று முத்திரை இட்டுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்களின் முறைப்பாடுகளை அடுத்தே யாழ். கிளிநொச்சி மாவட்ட அளவைப் பரிசோதகர் திரு. வை. கிருஷ்ணதாஸன் அப்பகுதிச் சந்தை வியாபாரிகளுக்கு இவ்வறிவித்தலைக் விடுத்துள்ளார். [21]

## லாண்ட்மாஸ்டர் - சைக்கிள் விபத்தில் சிறுவன் பலி

(கொக்குவில்)

கொக்குவில்பகுதியில்நேற்று நண்பகல்நடைபெற்ற லாண்ட்மாஸ்டர் சைக்கிள் விபத்தில் பாடசாலைச் சிறுவன் ஒருவன் பலியானான்.

பாடசாலைவிட்டு செல்லும் வழியில் நடைபெற்றஇவ்விபத்தில படுகாயமடைந்த சுதுமலை தெற்கு மானிப்பாயைச் சேர்ந்தகௌரிசங்கர்(வயது13) என்பவரே. யாழ். போதனா வைத்திய சாலைக்கு எடுத்து வரப்பட்ட ஒருசில நிமிடங்களில் அங்கு மரணமானார்.

மேற்படி விபத்து தொடர்பாக ஸ்தலத்திற்கு சென்ற தமிழீழ காவல் துறையினர் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (ச,க)

## இருவேறு விபத்துகளில் ஒருவர் பலி; இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் நடைபெற்ற மோட்டார் சைக்கிள் விபத்துகளினால் ஒருவர் பலியானார். இருவர் படுகாயமடைந்தனர்.

நேற்று முன்தினம் மந்திகைக்கும் மாலிச்சந்திக்கும் இடைப்பட்ட பிரதான வீதியில் நடைபெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த புலோலியைச் சேர்ந்த செ. சுப்பிரமணியம் (வயது 55) மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபின் நேற்று அங்கு மரணமானார்.

இதேவேளை சாவகச்சேரி நுணாவில் பகுதியில் நடைபெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் நடராஜா (வயது 41, சங்கத்தானை), மாணிக்கம் (வயது 28, வட்டுக்கோட்டை) ஆகிய இருவரும் படுகாயமடைந்தனர். இவர்கள் இருவரும் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### ஹமில்டன்

திருக்கோணமலை, மொரவேவ, மட்டக்களப்பு, வெலிகந்த, மகாஓயா, அப்பாறை ஆகிய இடங்களிலுள்ள சிறிலங்கா இராணுவ முகாம்களை இவர் பார்வையிட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

### அகதிமுகாம்

ட்டத்தில் உள்ள அகதி முகாமுக்குள் சிறிலங்கா இராணுவத்தினர் புகுந்து அப்பாவி அகதி மக்களை கைது செய்யும் நிகழ்வுகளை இவ் ஸ்தாபனம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

மேற்படி செயலைக் கண்டித்தும் இது போன்ற சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறாமல் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் படி சிறிலங்கா அரசிடம் இந்த ஸ்தாபனம் கோரியுள்ளது [க]

### வீரச்சாவு

இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரவேங்கைகள் ரவிராஜ், ராம்ராஜ் ஆகிய இரண்டு போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்

இவர்களுக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## மூளைக்காய்ச்சல்; ஆசிரியை மரணம்

(சாவகச்சேரி)

கொடிகாமத்தில் மூளைக் காய்ச்சல் நோயால் ஆசிரியை ஒருவர் மரணமாகியுள்ளார். கொடிகாமம் கோயிலாமனையைச் சேர்ந்த செல்வி எஸ். புஸ்பராணி (வயது 26) என்ற பாடசாலை ஆசிரியையே இவ்வாறு மரணமாகியவராவர். யாழ் மாவட்டத்தில் மூளைக் காய்ச்சல் நோயால் இதற்கு முன்னர் பலர்மரணமாகியமை தெரிந்ததே. (மு)

### ராஜீவ் கொலை விசாரணை

## புதிய நீதிமன்றம் உருவாக்கப்படவில்லை

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக விசாரித்துவரும் விசேட நீதிமன்றத்திற்கு மேலதிக நீதிபதியாக திரு. சௌந்தரபாண்டியன் நியமிக்கப்பட்டதை வேறொரு நீதிமன்றம் உருவாக்கப்பட்டதாக அர்த்தப்படுத்தலாகாது என்று தமிழக அரசின் செய்திக் குறிப்பொன்று தெரிவித்துள்ளது.

இதில் மேலும் விசேட நீதிமன்ற நீதிபதி எம். எம். சித்திக விடுப்பில் இருக்கும் காலத்தில் விசாரணைகளைத் தொடர்வதற்காகவே மேலதிக நீதிபதி நியமிக்கப்பட்டதாகவும், நீதிபதி எம். எம். சித்திக் ராஜீவ் கொலை மற்றும் தடா சட்டத்தின் கீழான வழக்குகளை தொடர்ந்தும் விசாரித்து வருவார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நிவாரண முத்திரை; பொருள்களைப் பெறவும்

(யாழ்ப்பாணம்)

ஆறாவது தொடர் வறுமை நிவாரண முத்திரையின் ஒன்பதாம் இலக்கப் புள்ளிக்கான பொருள்களை இந்த மாதம் 20-ம்திகதிக்கு முன்னர் கூட்டுறவுச்சங்கங்களிலிருந்து பெற்றுக் கொள்ளுமாறு யாழ் மாவட்ட சமூக சேவைகள் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

உணவுமுத்திரை விநியோகம் தொடர்பாக அவர் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. ஆறாவது தொடர் உணவு முத்திரைகள் இந்த வருடம் மார்ச் மாதம் வரை செல்லுபடியாகும். எனவே உணவு முத்திரைகளை தத்தமது உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலிருந்து பெற்று கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து பொருள்களைப்பெற்றுக் கொள்ளலாம்.

ஆறாவது தொடரின் 10ஆம் புள்ளிக்குரிய பொருள்களை மார்ச்மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னரும், 11 ஆம் புள்ளிக்குரிய பொருள்களை மார்ச் 25 ஆம் திகதிக்கு முன்னரும், 12 ஆம் புள்ளிக்குரிய பொருள்களை ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னரும் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் மாதத்திலிருந்து புதிய உணவு முத்திரைகள் விநியோகிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மட்டக்களப்பில்

படுகாயமடைந்தனர் பவல் கவசவாகனங்களும் சேதமடைந்தன.

இதேவேளைசிறிலங்காராணுவத்திற்கு உதவியாக இரண்டு குண்டுவீச்சு விமானங்களும் இரண்டு உலங்கு வானூர்திகளும் விடுதலைப்புலிகள் மீது றொக்கட் தாக்குதலை நடத்தின. விடுதலைப்புலிகளின் எதிர்தாக்குதலையடுத்து விமானங்கள் திரும்பிச்சென்றுவிட்டன.

விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட இந்த உக்கிர தாக்குதலில் பெருந்தொகையான நவீன ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

### வீதி ஒழுங்கைப்

தகைய அறிவுறுத்தல்களைத் தொடர்ந்து கடைப்பிடிப்போமானால் இழப்புக்களைத் தவிர்க்கலாம். ஒருவர் வீதி ஒழுங்கை மீறுவதால் அவர் மட்டுமல்ல இன்னும்பலர்விபத்துக்களுக்கு உள்ளாகின்றனர். எனவே வீதி ஒழுங்கு விதிகளை தீவிரமாக அமுல்படுத்த காவல்துறையினர் ஈடுபடுத்தப்படவுள்ளனர். இவ்வாறான சந்தர்ப்பங்களில்கஷ்டங்கள், சிரமங்கள், ஏதாவது ஏற்பட்டால் அவற்றை பொருட்படுத்தாது காவல் துறையின் உறுப்பினர்களுக்கு பொது மக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்குப்படி காவல் துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## ஆண்டு 3 இற்கு ஆங்கில பாடம்!

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்கில் முதல் தடவையாக அரசாங்க பாடசாலைகளில் ஆண்டு மூன்று மாணவர்களுக்கு ஆங்கிலம் போதிக்கப்படவுள்ளது.

இது தொடர்பான கல்விபற்றிய சேவைக்காலப் பயிற்சி ஒன்று இன்று யாழ் மத்திய கல்லூரியில்நடைபெறவுள்ளது இதில் யாழ். மாவட்டப்பாடசாலைகளின் ஆங்கில ஆசிரியர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். (ச)

## யாளலவில் தீவிபத்து

யாளல பகுதியிலுள்ள விமானப் படைத்தளத்திற்கு அருகே நேற்றுமுன்தினம் தீவிபத்து ஒன்று ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த தீவிபத்தில் பத்து வீடுகள் முற்றாக எரிந்து சாம்பராகின.

விமானப்படையின் உதவியுடன் தீ அணைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## ஒரு படை பலி; மூவர் படுகாயம்

(வவுனியா)

பேயாடிக் கூளாம்குளம் பகுதியில் கைக்குண்டு ஒன்று வெடித்ததில் ஒரு சிறிலங்கா இராணுவ வீரர் பலியாகினார். மற்றும் மூன்றுபேர் படுகாயம் அடைந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

### திட்டமிட்டபடி

நொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார்மாவட்டங்களிலும் ஒரேநேரத்தில்நடைபெற இருப்பதால் இப் பரீட்சையை யாழ்ப்பாணத்திலும் நடாத்த வேண்டிய நிலையுள்ளதாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (ச, க

## மரண அறிவித்தல்

### பேராயர் சபாபதி குலேந்திரன்

தென்னிந்திய திருச்சபை யாழ்ப்பாண முன்னாள் பேராயர் (1947 - 1970) அதிவண. சபாபதி குலேந்திரன் காலமானார். இவர் காலஞ்சென்ற திருமதி மதுரம் குலேந்திரன் அவர்களின் கணவரும் திருமதி கருணா ரட்ணராஜா, தயாநிதி குலேந்திரன் (மாலைதீவு) அனுக்கிரகஜோதிகுலேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை வட்டுக்கோட்டை பேராலயத்தில் 17-2-92 திங்கள் காலை 8.30 மணிக்கு நடைபெறும். இவ் அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
DIOCESAN SECRETARY
J.D.C.S.I.

(2209)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது